REGD. No. M. 6311

:PHONE No. 55630

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்
மலர் 1] [இதழ் 301

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: வைகாசி 19உ செவ்வாய் (1—6—54) ★ ★ ★ வெளியூர்: வைகாசி 20உ புதன் (2—6—54)

புதுவை அருகே போலீஸ் யுத்தம்!

இருவர் மாண்டனர்; இருவருக்குக் காயம்

ஆயுதம் கொண்டு சென்ற தோணிகள் பிடிபட்டன?

பாரிஸ் பேச்சு—பலன் பூஜ்யம்!

ஒரு வாரத்தில் பேச்சு முடியும்

பிரேஞ்சு சர்க்கார் போலீசுக்கும், இந்தியப் போலீசுக்கும் கைகலப்பு ஏற்பட்டது; இருவர் கொல்லப்பட்டனர்; இருவருக்குக் காயம் ஏற்பட்டது.

சம்பவம், புதுவைக்குப் பத்து மைல் தொலைவில் உள்ள 'பன்னித் தேட்டு' என்ற இடத்தில் நடைபெற்றது.

சாதாரண உடை அணிந்த 20 பிரெஞ்சு இந்திய போலீசார் தோணிகளில் வந்து இறங்கினர்.

கள்ளத்தனமாக தோணிகளில் ஆயுதம் கொண்டு செல்வதாகச் சந்தேகித்து, மூன்று இந்திய ஆயுதம் தாங்கிய போலீசார் அவர்களைத் தடுத்தனர்; தோணிகளைச் சோதனை போட முயன்றனர்.

பிரெஞ்சு இந்திய போலீசார் அதை எதிர்த்து, இந்திய போலீசாரிடமிருந்த துப்பாக்கிகளையும், தோட்டாக்களையும் பறித்துக் கொண்டனர்.

இதே சமயம், மேலும் சில இந்திய போலீசார் வந்தனர்—கை கலப்பு ஏற்பட்டது—துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது; இரண்டு பிரெஞ்சு இந்திய போலீசார் கொல்லப்பட்டனர்; இருவருக்குக் காயம் ஏற்பட்டது.

கடலூரிலிருந்து முக்கியமான போலீஸ் அதிகாரிகள் சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் சென்றுள்ளனர்.

புதுவை சம்பந்தமாகப் பாரிசில் நடைபெற்றுவரும் சமரசம் பலனளிக்காது என்று தெரிகிறது.

பல தடவைகள் கூடிப் பேசியும், பிரேஞ்சு சர்க்கார் தனது பழைய போக்கை மாற்றிக் கொள்வதாகக் காணோம்.

புதுவை, காரை, மாஹி எனும் பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்தித்தான் முடிவு காண வேண்டும், என்பது பிரேஞ்சு சர்க்கார் வாதம்.

[illegible] கம்யூன்களும், எல்லா அரசியல் கட்சிகளும் பிரேஞ்சு ஆதிக்கம் நீக்கப்பட்டாக வேண்டும் என்று தீர்ப்பளித்து விட்டதால், வாக்கெடுப்பு நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்பது இந்திய சர்க்காரின் வாதம்.

இரு தரப்பினரின் பேச்சும் நீண்டுகொண்டே போகிறது—சமரசம் ஏற்படும் என்பதற்

'டான்'

துணை ஆசிரியர்கள் கைது

கராச்சியில் 'டான்' பத்திரிகை துணை ஆசிரியர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

ஒருவர் ஆபீசிலேயும், மற்றவர் வீட்டிலேயும் கைது செய்யப்பட்டார்.

இருவரும் நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர்.

காரண அறிகுறி தெரியக் காணோம்.

இந்திய சர்க்காரும் பிரேஞ்சு சர்க்காரும் கூட்டாக ஆட்சி நடத்துவது என்ற திட்டத்தை முதலில் வெளியிட்டவர்களே இப்போது அது பற்றி பேசவும் கூச்சமடைகிறார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

★ வாழ்வு வளமாகிறது வடக்கே!

பூஜையும் பலனும்!

சென்னை, மே 31—

கந்தசாமி கோயில் குளத்திலே 35 வயதான நாகரத்தினம் என்பவர் விழுந்திறந்தார். இவர், பாய்க் கடையில் ஒரு சிறு வியாபாரி. வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால் தற்கொலை செய்துகொள்வதாக எழுதப்பட்ட கடிதம் அவரிடம் இருந்தது. கோயில் படிக்கட்டில் அவருடைய சிறு மூட்டை இருந்தது அதிலே பூஜைச் சாமான்களும், தேங்காய் மூடியும் இருந்தன.

ரூ. 100 கோடி வருமானம் கிடைக்கும் திட்டம்

'பக்ரா' கால்வாய் திறப்பு விழா

சந்திகார், மே 31—

108 மைல் நீளமுள்ள பக்ரா கால்வாய் திறப்பு விழா இன்று பஞ்சாப் முதலமைச்சர் பீம்சேன் சச்சாரால் நடத்தப்பட்டது.

இந்தக் கால்வாயில் 'சட்லஜ்' நதியிலிருந்து தண்ணீர் விடப்படுகிறது.

இந்த வைபவத்தைக் காண ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். வாண வேடிக்கையும் நடைபெற்றது.

இந்த பக்ரா கால்வாய் திட்டம், பிரம்மாண்டமான முயற்சி இது முழுவதும் கட்டி முடித்ததும், ஜூலையில், நேரு பண்டிதர் வரவழைக்கப்பட்டு விழா ஒன்று நடத்தப்படும் என்று சச்சார் கூறினார்.

பக்ரா கால்வாயின் பலனாக, நீர்ப்பாசன வசதி அதிகரிக்கும் என்றும், 100 கோடி ரூபாய் அளவு வருமானம் மக்களுக்குக் கிடைக்கும் என்றும் பீம்சேன் சச்சார் கூறினார்.

இதுவரை இந்தியாவில் அமைக்கப்பட்ட கால்வாய்களில், பக்ரா கால்வாய்தான் நீளமானது. 2000 தொழிலாளர்களும் 20000 கூலிகளும் இந்தக் கால்வாய் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் கால்வாயில் சட்லஜ் நதியின் நீரும், வேறு சில காட்டாறுகளின் நீரும், சேர்க்கப்பட்டு, இதுவரை யில், வறட்சிப் பிரதேசமாக இருந்த, ஹிசார், ராஜஸ்தான் பகுதிகளை வளமுள்ளதாக்கும்

வாழ்வளிக்கும் திட்டங்கள் மேலும் பலப்பல நிறைவேற்றப்படும், என்று பீம்சேன் [illegible] அறிவித்தார்.

தூத்துக்குடி சதி வழக்கு

மேலும் இருவர் ஜாமீனில் விடுதலை

சென்னை, ஜூன் 1—

தூத்துக்குடியில் நடைபெற்ற அறப்போர் கிளர்ச்சியில் ஈடுபட்ட தோழர்கள் மீது சதிக்குற்றம் சாட்டி சிறையிலடைக்கப்பட்டிருந்தவர்கள் ஜாமீனில் விடுதலை பெற்ற பிறகும், இரு தோழர்கள் மட்டும் சிறையிலிருந்து வந்தனர்.

இன்று உயர்நீதி மன்றத்தில், நீதிபதி திரு இராமசாமி கவுண்டர் அவர்கள் ஜாமீன் மனுவை ஏற்றுக் கொண்டு, திரு. காசி நாடார் (94) திரு. அருணாசல நாடார் (95, ஆகிய இருவரையும் ஜாமீனில் விடுதலை செய்யும் படி உத்திரவிட்டார்.

தூத்துக்குடி சதிவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட எல்லா தோழர்களும் ஜாமீனில் விடுதலை பெற உயர்நீதி மன்றத்தால் உத்திரவு அனுப்பப்பட்டு விட்டது. இனி சிறையில் ஒருவரும் இருக்கவேண்டியதில்லை.

அட்வகேட் தோழர் கே. நாராயணசாமி அவர்கள் பெங்களூர் சென்றிருக்கிறார்கள். இன்று இந்த இரண்டு தோழர்களுக்காக அட்வகேட் டி. சுந்தரம் அவர்கள் உயர் நீதிமன்றத்தில் ஆஜரானார்.

'ஆமாம் சாமி'களாகமாட்டோம்!

சர்வாதிகாரத்தை ஒழித்துக் கட்டுவோம்

ஊழல் ஆட்சியைக் கண்டிப்போம்

மைசூர் 'காமராசர்' முழக்கம்

பெங்களூர் மே 31—

சென்னையில் நடைபெற்றதுபோலவே, மைசூரிலும் காங்கிரஸ் முதலமைச்சருக்கும் பிரதேச காங்கிரசுக்கும் தகராறு கிளம்பி மும்முரமாகிவிட்டது. இரண்டு மூன்று தடவை சமரசம் காண எடுத்துக்கொண்ட முயற்சி பலன் தரவில்லை. எதிர்ப்பு வளர்ந்துவிட்டது. பிளவு விரிவடைந்துவிட்டது.

மைசூர் முதலமைச்சராக உள்ளவர் அனுமந்தய்யா.

மைசூர் பிரதேச காங்கிரஸ் தலைவராக உள்ளவர் வீரண்ணா கௌடா.

முதலமைச்சர் சர்வாதிகாரப் போக்கிலே இருக்கிறார், ஊழலாட்சி நடத்துகிறார். இதனால் காங்கிரசின் பெயரும் கெடுகிறது, மக்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது என்று மைசூர் 'காமராஜர்' குற்றம் சாட்டுகிறார்.

"'சத்யமே ஜெயம்' என்று நான் நடந்துகொள்கிறேன்; வீண் பழி சுமத்துகிறார்கள்; வேண்டாமென்று பிரதேச காங்கிரஸ் கூறினால், போய் விடுகிறேன்,"—என்று கதறுகிறார், அனுமந்தய்யா!

"அனுமந்தய்யா, பிரதேச காங்கிரசை மதிப்பதில்லை; கலந்து பேசுவதில்லை; யோசனைகளை ஏற்பதில்லை; ராஜ்பத்தின் புகழ் கெடும்படியான செயலில் ஈடுபடுகிறார்,"—என்று பிரதேச காங்கிரஸ் தலைவர் வீரண்ணா குற்றம் சாட்டியிருக்கிறார்.

நேற்றிரவு நடைபெற்ற மைசூர் பிரதேச காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், புயல் வீசிற்று. அனுமந்தய்யா பேசுவதற்காக எழுந்தபோது, அவரை அனுமதிக்க முடியாது என்று காங்கிரஸ் தலைவர் கண்டிப்பாகக் கூறினார்.

ஒலிபெருக்கி எதிரே நின்று கொண்டு, பேச முடியாமல், அனுமந்தய்யா திணறினார்.

பலருடைய சிபாரிசுக்கும் [illegible]

பிறகு, அனுமந்தய்யா பேச அனுமதிக்கப்பட்டார்.

காங்கிரசின் ஒற்றுமை கெடக்கூடாது என்றும், பிரதேச காங்கிரசின் கட்டளையை ஏற்கத் தாம் சித்தமாக இருப்பதாகவும், தன்னிடம் பிரதேச காங்கிரசுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிவித்தால், பதவியிலிருந்து விலகிக்கொள்வதாகவும் அனுமந்தய்யா கூறினார்.

"நான் பிரதேச காங்கிரசின் தீர்ப்பை ஏற்றுக்கொள்வேன்; நேரு பண்டிதருடைய தயவை நாடி, பதவியில் இருக்க முயற்சிக்கமாட்டேன்,"

என்றும் அனுமந்தய்யா கூறினார்.

வீரண்ணா, அனுமந்தய்யாவின் ஆட்சி முறையைக் கண்டித்து நேரு பண்டிதரிடம் பேசிவிட்டு வந்திருக்கிறார். இதைத்தான் மறைமுகமாக அனுமந்தய்யா இடித்துக் காட்டினார்.

காங்கிரஸ்காரர்கள் தலைவருக்கு 'ஆமாம் சாமிகளாக' இருக்கவேண்டுமென்று யாரும் எதிர்பார்க்கக்கூடாது. சர்க்காருடைய நடவடிக்கைகளிலே

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 1—6—54 செவ்வாய்

இதுவும் ஒரு காலட்சேபம்தான்!

அகில உலக மாநாடு! அதுவும், ஐதராபாத்தில்!!

வாஷிங்டனும், மாஸ்கோவும், பாரிசும், பீகிங்கும் ஜினீவாவிலே கூடி, அகில உலக நெருக்கடியைப் பற்றி ஆலோசனைகள் நடத்திக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இங்கே, இந்த மாநாடு! எவருக்கும் தெரியாமல்!!

மூன்று நாட்கள் நடைபெற்றதாம்; மும்முரமான தீர்மானங்கள் தீட்டப்பட்டதாம்; அகில உலக மாநாடல்லவா? சாரமும், சாரமும் அதிகம் இருக்கும்—கம்யூனிசமும், முதலாளித்துவமும் பற்றிய கருத்து முத்துக்கள் உருண்டிருக்கும்—இந்தோ சீனாவின் இரத்தக் களறி பற்றி விவாதிக்கப்பட்டிருக்கும்—இலங்கை வாழ் தமிழரின் துயர் பற்றியும், ஆப்பிரிக்க மலானின் அட்டகாசத்தைப் பற்றியும், ஆலோசிக்கப்பட்டிருக்கும் - என்றுதான் எண்ணத் தோன்றும், எவருக்கும்! மாநாடு, அகில உலக மாநாடல்லவா!

ஆனால், ஐதராபாத்திலே கூடியோர், சாமான்யர்களாயிருந்திருந்தால், இந்த சாதாரண விஷயங்களைப் பற்றி எண்ணியிருப்பர். அவர்கள் கண்களின் முன்பு, இத்த மாபெரும் நிகழ்ச்சிகள் தூசுகளன்றோ? கேவலம்! இகலோக இச்சைகளில் உழன்று, ராமனை மதிக்காது, கத்தியும் அப்பாக்கியும் ஏந்தி, கர்ஜிக்கும் நாடுகளைப் பற்றியா ஆராய்வர். அதுவும் கூடியோர், ஆரியராம்—நாம் சொல்லவில்லை, மாநாட்டுச் செய்தி கூறுகிறது: ஐதராபாத்திலே நடைபெற்றது, அகில உலக ஆரியன் (International Aryan Conference) மாநாடாம்!! அங்கே, அதுவும் அவர்கள், இந்த அல்ப விஷயங்களைப் பற்றியா, எண்ணுவர்? சேச்சே! என்ன ஆவது, ஆண்டவன் பெருமை!

முக்தி மார்க்கம் காட்டும் மார்க்க பூபதிகளுக்கு மண்ணும் பொன்னும், ஒரு பொருட்டோ? மும்மலம் நீங்கிய முத்தர்கள், மோட்ச லோகத்தை நாடாது பூலோக இச்சைகளுக்கு ஆட்பட்டு, பொருள்—கீர்த்தி—கித்தாப்புக்காகப் போட்டி போடும், இந்த சாமான்ய ஜனப் பிரச்னைகளைப் பற்றியா, காலத்தையும் நேரத்தையும் கழிப்பர்? அதுவும் 'ஆரியர்கள்'!

அதனாலேயே, அந்த அகில உலக மாநாட்டிலே மூன்று நாட்கள் கூடி, மும்முரமாக விவாதித்து, முக்கியமான தீர்மானம் ஒன்றைத் தீட்டி, அனுப்பியிருக்கிறார்கள் - ஆண்டவனுக்கல்ல! அரசாங்கத்துக்கு!!

பூலோகத்தில் வாழும் ஏழை மக்களையும், 'கீழ்சாதி'யினரையும் கெடுத்து, 'பள்ளிக்கூடம் கட்டித் தருகிறோம்—அதைச் செய்கிறோம்—இதைச் செய்கிறோம்,' என்று ஆசை காட்டி, அதன்மூலம் தமது மதத்தைப் பரப்புகின்றனராம்—பிறர்; இந்தப் பேரிடியைச் சகிப்பதோ! நமது பெம்மானுக்குள்ள பெருமையைச் சீரழிக்கக் கிளம்பியிருக்கும் இந்த 'சிறுமதி'யாளர்களின் போக்கை அனுமதிப்பதோ? ஆகாது! கூடாது! ஆபத்து! என்று அலறியிருக்கின்றனர்.

பிற மதக்காரர்கள், பள்ளிக்கூடங்கள் கட்டிக் கொடுத்து, அதன் மூலம் பிரச்சாரம் செய்கின்றனராம்! ஏழைகளையும் மோசழகளையும், நரகிலே தேன் தடவி நயவஞ்சகப் பாதைக்கு இட்டுச் செல்கின்றனராம்!! சீறுகின்றனர்; தீர்மானமும் தீட்டியிருக்கின்றனர். அதுபோன்ற மதத்தவர்களின் போக்கை, அரசாங்கம் விட்டுவைக்கக் கூடாதாம்.

வேண்டுகோள் விடுத்தோர், மற்றோர் கோரிக்கையையும் விடுத்திருக்கின்றனர், அரசாங்கத்துக்கு—"அரசே! அனுமதிக்காதே, அத்துஷ்டர்களை! எப்படியோ, பணத்தைத் தேடி, ஏழைகளுக்கு நன்மை செய்வதாகக் காட்டி, அவர்களை வலையில் போடுகிறார்கள்; அந்த வலையில் விழாமல் தடுக்க, அவர்களைப் போல நீயும், பள்ளிக்கூடங்களைக் கட்டிக் கொடு—ஆஸ்பத்திரிகளை அமைத்துத்தா—ஏராளமான நன்மைகளைச் செய்," என்பதாக!

ஆரிய மதம் கெடுகிறதாம், பிறரால்! அந்தப் பிறர், தேனை தடவி, சொக்கச் செய்கின்றனராம், மக்களை!! அந்த மக்களை மாற்றி, மயக்கி, தமது கூட்டை விட்டு பறக்காமலிருக்க அரசாங்கமும் சட்டம் செய்ய வேண்டுமாம் - திட்டம் போட வேண்டுமாம்—செலவும் [illegible]ப்பவேண்டுமாம்!!!

ஆயிரமாயிரம் ஏக்கர் விளைச்சலை அக்காரவடிசலுக்கும், குவியும் ரூபாய்களைக் கொட்டு முழக்குக்கும், அர்ச்சனை வருமானத்தை 'ஆத்துக்காரி'யின் நகை நட்டுக்கும் செலவிடும் இந்த விவேகிகள், மாற்றார் ஏழைக்கும், இயலாதவனுக்கும் செய்யும் உதவிகளைக் கண்டு மன எரிச்சல் கொண்டு, அலறி கூவி, அரசாங்கத்தை அழைக்கிறார்கள்.

உதவ வேண்டுமாம்—எதற்கு?—ஏழை மக்கள், என்றும் ஆரிய மதக் கூடாரத்திலேயிருக்கும்படிச் செய்வதற்கு!!

இவ்வளவு துணிவு ஏற்படச் செய்த அவர்கள் உள்ள உரத்தை வியப்பதா! அல்லது, அவ்வளவு உள்ள உரம் ஏற்படும்படி அனுமதிக்கும் இந்த அரசினை நோவதா!! வலையை வீசி, மானைப் பிடித்துக் கொடு,—நரி கேட்காது, புலியை—ஆனால், இவர்கள் கேட்கிறார்கள்.

ஏழை! கீழ் சாதி!!—இவைகளை எந்த மதம், உற்பத்திச் செய்தது? மதம், போகிறதே யெனும் வேதனையில், மகிழ்ச்சியூட்டும் காரியங்களைச் செய்யுமபடி அரசுக்குத் திருமுகம் அனுப்பும் இத் திவ்யரூபர்களைக் கேட்கிறோம்-ஜாதியும், ஆண்டானடிமையையும், உண்டாக்கியது, யார்?

சிக்கலான கேள்வியல்ல; எனினும், சிறுவர், கேட்டால்!

சாக்கடையை உண்டாக்கியதுதானே, போவோர் வருவோர், அதில் வீழும் மக்களை வெளியிலிழுத்து, குளிப்பாட்டி, தன் கூடாரத்துக்குக் கொண்டுசெல்ல முடிகிறது!

அதைக் கண்டு ஆயாசம் அடைகின்றனர், ஆண்டவனுக்கும், தமக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகக் கூறும், ஆரியர்! மகிழ்கிறோம்!—மக்களை சாக்கடையினின்று மீட்க வேண்டும் எனும் மன இரக்கம், இவ்வளவு நாள் கழித்தாவது, ஏற்பட்டமைக்காக!!

ஆனால், அந்த நேரத்தில், ஒன்றை நினைவூட்ட விரும்புகிறோம்—வியாதியஸ்தனைச் சுகமாக்க வேண்டுமென்றால், மருந்து அவசியம்தான்! இன்றேல், உயிர் போய்விடும்!! ஆனால், அந்த மருந்தினை வழங்குமுன், வியாதி என்னவென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, மாற்றாரின் பணி கண்டு, மன எரிச்சல்கொண்டு தொண்டு செய்யும்படி டரைத்(?) தனத்தாருக்கு 'ஆணை' பிறப்பிக்கும் அன்பர்கள், ஆரிய மதமாம் இந்துமதம் இத்தனை நாளும், என்னென்ன கேடுகளைச் செய்து வருகிறது என்பதையும் எண்ண வேண்டும்.

அதை விட்டுவிட்டு, அடுத்தவீட்டுக்காரியின் வயிற்றுக் கனத்தைக் கண்டு பலர் தன்னுடைய வயிற்றிலடித்துக் கொண்டாளாமே, அதுபோல நடப்பது, பயன்தராது—பலனும் ஏற்படாது.

ஐதராபாத் மாநாட்டினர், நாடெங்கும் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி, இந்துமத புனருத்தாரணத்துக்கு ஏதாவது செய்யும்படி அரசாங்கத்தை வேண்டுகிறார்கள்!

ஆனால் அரசுக் கட்டிலின் அதிபதியாகவும், அதே நேரத்தில் இந்த மார்க்கத்தின் இணைபற்ற தலைவராகவும், இருக்கும் முன்னாள் முதலமைச்சர் ஆச்சாரியாரோ 'பள்ளிகள் ஏன்? நாடு முழுமையும் பஜனை மண்டபங்களையும், காலட்சேபக் கூடங்களையும் கட்டினால் போதும்,' எனத் திருவாய்மலர்ந்தருளுகிறார்.

மக்களின் இழிநிலை துடைக்கும் எண்ணமிருந்தால், இப்படியெல்லாம், பேசச் சொல்லுமா! 'அகில உலக' முத்திரையில் மாநாடு கூட்டச் சொல்லுமா!!

இதுவும், ஒருவகை காலட்சேபம்! அவ்வளவுதான்!!

இஸ்ரேல் - எகிப்து பகை

இஸ்ரேல் நாட்டுக்கும், எகிப்துக்கும் பகை முற்றிய வண்ணம் இருக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையே உள்ள 37 மைல் நீள எல்லைப் பகுதியிலும்; இருதரப்பு துருப்பினரும், 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்,' என்ற போக்கிலே நடந்து கொள்கின்றனர்.

இலங்கை கல்வி நிலையங்கள் காலியாகும்!

ஆயிரம் ஆசிரியர்கள் வெளியேறுவர்

கொழும்பு, மே 28—

இலங்கையில் உள்ள குறிப்பாக, யாழ்ப்பாணத்திலிருக்கும் இந்திய ஆசிரியர்கள், இலங்கை அரசாங்கம், இந்தியர்கள் இலங்கையில் வசிப்பதற்கு விதித்துள்ள தடைகளின் காரணமாக குழப்பமடைந்திருப்பதாகத் தெரிகிறது.

கல்வி நிலையங்கள், ஆசிரியர்களில்லாது காலியாயிருக்கும் நிலையைத் தவிர்க்க, இந்திய ஆசிரியர்கள், அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

தற்சமயம் சுமார் 1000 ஆசிரியர்கள் சர்க்கார் கல்லூரிகளிலும், தனிப்பட்ட கல்விச் சாலைகளிலும் வேலை பார்த்து வருகின்றனர்; விஞ்ஞானம், மற்றும் தொழிற்கல்வி முதலியன போதிக்கும் திறமை பெற்ற ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லாமையினால், இலங்கை அரசாங்கம், இந்த ஆசிரியர்கள் அங்கு வேலை பார்ப்பதை அனுமதித்திருக்கின்றனராம்.

தற்காலிகமாகத் தங்கும் அனுமதியுடன் இவர்கள் அங்கிருப்பதை, இப்போது இலங்கை அரசு, 'விசா' முறையாக மாற்ற முடிவு செய்துள்ளதாம்.

இந்த ஆசிரியர்கள், தங்களுக்கு தொடர்ந்து அங்கு தங்குவதற்கான வசதிகள் அளிக்கப்பட்டால் ஒழிய, தாங்கள் இலங்கையை விட்டு வெளியேறி, இந்தியாவில் வந்து வேலை தேடிக்கொள்ள எண்ணுவதாக, தங்கள் கல்வி நிலையத் தலைவர்களுக்கு அறிவித்து விட்டதாகச் சொல்லப்படுகிறது.

இந்தத் தகவல்கள் இலங்கை 'தினகரன்' தின இதழில் காணப்படுகின்றது.

அகமது நகர் காங்கிரசில் பிளவு

ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பாரதியின் நண்பர் டி. எஸ். ஜாதவ் என்பவரை சர்க்கார் சிறை வைத்திருப்பதை ஒட்டி அகமதுநகர் ஜில்லா காங்கிரசில் பிளவு ஏற்பட்டுவிட்டது.

இப் பூசல் காரணமாய் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டமொன்றில் தலைவர் பாரதியின் மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அஜெண்டாவில் அத்தீர்மானம் இல்லை என்று அத்தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

திரு—கொச்சியில் கூட்டுறவு சங்கங்கள்

திரு—கொச்சி மாநிலத்தில் மொத்தம் 2,806 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன; இந்தச் சங்கங்களில் நான்கு லட்சம் உறுப்பினர் உள்ளனர்; சங்கங்களின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ 7,23,631 ஆகும் உபயோகத்திலிருக்கும் மொத்த மூலதனம் ரூ 30 கோடிக்கும் அதிகம். இந்த கூட்டுறவுச் சங்கங்கள் உணவு, பால் விநியோகம், பண்ணைகள், தேனீ வளர்த்தல், வெல்ல உற்பத்தி, நெசவு, குடிசைத் தொழில்கள் ஆகியவற்றை மேற்கொண்டிருப்பதுடன், அத்தியாவசியப் பொருள் விற்பனையிலும் இவை ஈடுபட்டிருக்கின்றன.

இலங்கையில் மற்றொரு அமெரிக்க வானொலி நிலையம்

இலங்கையில், வாய்ஸ் ஆப் அமெரிக்கா ஒரு புது வானொலி நிலையத்தை அமைக்கப் போகிறது. கொழும்புலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள ஒரு இடம் பார்வையிடப்படுகிறது.

யுத்தத்தை பெண்கள் எதிர்க்கின்றனர்

திருமதி டோரா ரசல் கருத்து

"சர்வதேச விவகாரங்களில் இந்தியா கடைப்பிடித்து வரும் நடுநிலைக் கொள்கையை விடாப்பிடியாகத் தொடர்ந்து கைக்கொள்ளும் என நம்புகிறேன்.

'சர்வதேச பெண்கள் ஜனநாயகக் கழகம் சுமார் 63 நாடுகளிலிருந்து வந்துள்ள 14 கோடி பெண்களின் குரலாக இருக்கிறது. அந்தக் குரல், தேசியக் கொள்கையாக, யுத்தத்தை மேற்கொள்வதை, எதிர்த்து ஒலிக்கிறது.

"கல்கத்தாவில் ஜூன் மாதத் துவக்கத்தில், இந்தியப் பெண்கள் தேசியக் கூட்டுறவுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற இருக்கும் பெண்கள், காங்கிரசும் சர்வதேச பெண்களின் குரலை உறுதிப்படுத்தும் எனவும் நான் நம்புகிறேன்."

இனிப்பு உண்பதில் இங்கிலாந்து நாட்டவரே முதல்வர்!

இங்கிலாந்து நாட்டவர்தான் உலகிலேயே அதிகமான 'இனிப்புப் பண்டங்கள்' தின்பவர்களாம். சென்ற ஆண்டில் மட்டும் சுமார் 323 கோடி ரூபாய் மதிப்புள்ள இனிப்புத் தின்பண்டங்களை வெள்ளையர் தின்றனராம்.

கட்டுப்பாடு இருந்த காலத்தில் வாரத்திற்கு ஆறு அவுன்ஸ் வீதம் சாப்பிட்டவர்கள் இப்போது வாரம் எட்டு அவுன்ஸ் சாப்பிடுகின்றனராம். யுத்தத்திற்கு முன்பு கூட வாரம் ஏழு அவுன்ஸ் சாப்பிட்டனர். இப்போது கட்டுப்பாடு எடுக்கப்பட்டுவிட்டபிறகு எட்டு அவுன்ஸ் சாப்பிடுகின்றனர். இங்கிலாந்தியர் எப்போதுமே, உலகின் வேறெவரைக் காட்டிலும் அதிகம் இனிப்பு உண்பவர்களாவர்.

இலங்கைத் தூதுவர்

தென் இந்தியரை நியமிக்கக் கோரிக்கை

சென்னை, மே 30—

நேற்று மாலை திருவல்லிக்கேணி இளம்பிறைச் சங்கத்தின் ஆதரவில் தோழர் பி. வரதராஜுலு, எம். எல். ஏ., தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில், இலங்கையில் தற்போதுள்ள இந்திய தூதுவரை வாபஸ் பெற்று அவருக்குப் பதில், இலங்கைப் பிரச்னையில் அனுபவம் வாய்ந்த ஒரு தென் இந்திய அதிகாரியையோ அல்லது உத்தியோகத் தொடர்பற்றவரையோ நியமிக்க வேண்டுமென இந்திய சர்க்காரைக் கோரி தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மானத்தை ஆதரித்து தோழர் ஏ. கிருஷ்ணய்யர், திருமதி ஜெயலட்சுமி ஆகியோர் பேசினர்.

பெற்ற வெற்றி பெருமை தருவதாகும்

வேலி ஓரத்தில் நின்றவர்களுக்கு நாம் அடைந்த வேதனை தெரியாது

கஞ்சிக்கலயத்தைகையிலேந்தியவர்களே கஷ்டத்தை உணர்வர்

அயன்புரம் வெற்றி விழாவில் பொதுச்செயலாளர்

"ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை எதிர்த்து வெற்றி பெற்றிருக்கும் பெருமை நமக்கிருக்கிறதே, அது சாதாரணமானதல்ல ;—அந்தப் பெருமையின் அருமையும், அளவும் திட்டத்தை எதிர்க்க களத்திலே நின்ற நமக்குத்தான் தெரியும் ;—திட்டத்தை எதிர்த்து, தியாகராய நகரிலே, யார் யார் தியாகம் பல புரிந்தார்களோ, யார் யார் கை கால்களைக் காணிக்கையாகத் தந்தனரோ, யார் யார் காராக்கிரகத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார்களோ, யார் யார் காராக்கிரகத்திலே கஞ்சிக் கலயம் ஏந்தினார்களோ, கஷ்ட நஷ்டங்கள் பல மேற்கொண்டார்களோ அவர்கள்தான் உணர முடியும்—திட்டம் ஒழிக்கப்பட்டதால் கிடைத்துள்ள வெற்றியின் பெருமையை!"

"திட்டத்தைக் கைவிட்டபோது கனம் மந்திரி சுப்ரமணியம், 'திட்டத்திற்கு நாட்டு மக்களிடம் ஆதரவு கிடைக்கவில்லை,' என்று சொல்லியிருக்கிறார் இந்த மனிதர், அதே சட்ட சபையில், சின்னாட்களுக்குமுன் தான் கோவையிலே ஒரு பிரபலமான வக்கீல் எனச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்—அவர் ஒரு பிரபலமான வக்கீலாம்—ஆனாலும், அவர் நாட்டு மக்களிடையே தனது திட்டத்தைப் பிரசாரம் செய்து அவர்களின் ஆதரவைத் திரட்ட இயலவில்லையாம்! எப்படி இருக்கிறது பாருங்கள்—இந்தத் திறமையான வக்கீலின் பிரயல்யம்! இவரிடம் வழக்கைக் கொடுத்திருந்தவர்கள் என்ன கதி அடைந்தார்களோ? அது இப்போது இந்த மனிதர் விட்ட கோட்டையைப் பார்த்தாலே தெரியவில்லையா?"

"இவருக்கும் இவரின் குருநாதருக்கும், என்ன இருக்கவில்லை—பத்திரிகை பலம் மிகப் பலமாயிருந்தது; பிரச்சார பலமும் அப்படியே; அதிகார பலமும் அளவுக்கு அதிகமாகவே இருந்தது; சுப்ரமணியத்தைப் போன்றவரின் பிரபல்யம் இருந்தது; என்றாலும் தோற்றுப்போனார்கள் என்றால் என்ன பொருள்? இரும்புக் கவசம் அணிந்திருந்தும், எதிரியின் அம்பு இதயத்தைத் துளைத்திருக்கிறதென்றால், கூர்வாள் இருந்தும் தோற்றுப் போயிருக்கிறதென்றால் என்ன பொருள்? எதிரி தன்னைக் காட்டிலும் பலசாலி என்பது தானே பொருள்!"

சென்னை அயன்புரம் தி. மு. கழகச் சார்பிலே, 30—5—54 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு ஆச்சாரியார் கல்வித் திட்ட ஒழிப்பு வெற்றி விழாக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் கே. ஏ. மதியழகன் தலைமை தாங்கினார். தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர். அடுத்து பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் ஆச்சாரியாரின் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டது குறித்து நாம் ஏன் மகிழ்கிறோம், வெற்றி விழா கொண்டாடுகிறோம் என்பது குறித்தும், திராவிடம் பிரிய எதிர்காலத்திலே நாம் மகத்தான பல போராட்டங்களில் ஈடுபட வேண்டியிருப்பது குறித்தும் விளக்கவுரை ஆற்றினார்கள். கூட்டத்தில் லட்சத்திற்கு அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மேலும் கூறியதாவது :—

"ஆச்சாரியார் புகுத்திய புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்ட சம்பவம் சாதாரணமானதல்ல; தமிழ் நாட்டின் அரசியல் சரித்திரத்திலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய அளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அன்பர் ஆச்சாரியார், இந்த நாட்டில், ஒரு சக்தியின் தலைவராக விளங்குகிறார்; யாரும் மறுத்துவிட முடியாது!

பெரியாரும் அப்படித்தான்.

ஆச்சாரியார், ஆரிய சமுதாயத்தைப் பாதுகாக்கும் பொறுப்பேற்றிருக்கும் தலைவராகவும், பெரியார் அவர்கள் திராவிடச் சமுதாயத்திற்கு அதற்கு உரிய இடத்தைப் பெற்றுத் தரும் பெரும் பொறுப்பையும், கடமையையும் ஏற்றிருக்கும் தலைவராகவும், பெரியாரின் பின்னால்—இரண்டாம் படை வரிசையில் நானும் இருக்கிறோம் இதை அன்பர் ஆச்சாரியாரே ஒருமுறை சொல்லியிருக்கிறார்—மூதறிஞர் வேட்டை வட்டத்திலே என்று நினைக்கிறேன்—"புதிய கல்வித் திட்டத்தை, நான் புகுத்தியிருப்பதும் அதை எதிர்ப்பதும் புராண இதிகாச காலத்தில் நடைபெற்ற ஆரிய—திராவிடப் போரின் ஒரு பகுதியே—தொடர்ச்சியே" என்று அன்பர் ஆச்சாரியார் குறிப்பிட்டார்.

அன்பர் ஆச்சாரியார் திராவிட சமுதாயத்தவரிடம் இருமுறை தோற்றிருக்கிறார். 1938-ம் ஆண்டில் கட்டாய இந்தியைப் புகுத்தினார்—நாம் எதிர்த்தோம்; ஆயிரக்கணக்கானவர் சிறை சென்றோம்; தாளமுத்து—நடராசனைப் பலி தந்தோம்; பின் வெற்றி கண்டோம்.

அதே போன்று, இப்போது குறிப்பிட்டபடி — இரட்டைக் கல்வித் திட்ட முறை அன்பர் ஆச்சாரியார் புகுத்திய நேரத்தில், அதை யார் யாரோ எதிர்த்தார்கள்—நாமும் எதிர்த்தோம்; திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் தான் போரிலே ஈடுபட்டன.

திட்டம் எதிர்க்கப்பட வேண்டுமென்பது எல்லோரும் ஒப்புக்கொண்டதென்றாலும், அதை எதிர்த்துப் போரிடக் கஷ்டங்கள் பல மேற்கொள்ள வேண்டியிருந்தது. அன்று திட்டத்தை எதிர்த்துப் போரிடுவது சுலபம் என்று வாளாவிருந்தவர்கள் எல்லாம், திட்டம் எதிர்த்து முறியடிக்கப்பட்டு நாம் வெற்றி பெற்றிருக்கிற நேரத்தில் அந்த வெற்றி சாமானியமானது என்று கருதுகிறார்கள்.

இது எப்படி இருக்கிறதென்றால், காவியணிந்த பண்டாரம் தனக்குக் கல்யாணம் வேண்டாமென்பது போலும், பழம் கிடைக்காத நரி பழம் புளிக்கும் என்று சொல்வது போலவும் இருக்கிறது இல்லையா?

களத்திலே இடம் கிடைக்காதவர்களும், களம்புகத் துணிவும் இல்லாதவர்களும் வேண்டுமானால் கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டதைச் சாதாரணமானதாகக் கருதலாம்.

கட்டாய இந்தி எதிர்ப்பிலே ஈடுபட்டு சிறையிலே உயிர் நீத்தனர்—தாளமுத்து, நடராசன்! அதுபற்றி தோழர் பன்னீர் செல்வம் சட்டசபையிலே ஆச்சாரியாரைக் கேட்டபோது, "அவர்கள் கல்வி வாசனை இல்லாதவர்கள்; ஆகவே இறந்தனர்," என, திமிரோடு பதில் கூறினார்.

"பெரியார் அவர்களைக் கடும் உஷ்ணப் பிரதேசமான பெல்லாரி சிறைக்கு அனுப்பலாமா"? எனக் கேட்டபோது, "பெரியாரின் உடல்நிலைக்கு பெல்லாரி உஷ்ணம் உகந்ததுதான்," என்று பதிலுரைத்தார் ஆச்சாரியார்!

அன்று, அத்தகு கஷ்டங்களை ஏற்றுக்கொண்டுதான் இந்தியை எதிர்த்து முறியடித்தோம்.

இன்று—அன்றுபோல் பெரியாரும், நாமும் ஒன்றாக இல்லாவிடினும்—பிரிந்தபோதும் நான் குழல் துப்பாக்கியாகிய திராவிடர் கழகமும் தி. மு. கழகமும் இரு வேறு முனைகளில், ஆச்சாரியாரின் திட்டத்தை எதிர்த்து வெற்றி பெற்றிருக்கிறோம்.

இந்த வெற்றியையும், அதைப் பெறுவதற்கு நாம் பட்ட கஷ்டங்களும் வேலி ஓரத்தில் உள்ளவருக்குத் தெரிய நியாயமில்லை!

"இந்தப் பேட்டையிலே பேசிய நண்பர் செங்கல்வராயன் அவர்கள் நம்மை எல்லாம் குறைத்துப் பேசியதாகக் கேள்விப்பட்டேன்; பாவம்! அவர் பேசுவது மக்கள் காதிலும் விழவில்லை: மந்திரியாக்குபவர்கள் காதிலும் விழவில்லை; 'நம்மைத் திட்டுவதுதான் மந்திரி ஆகும் வழி' என அவர் எண்ணுவாரானால், நன்றாகச் செய்யட்டும்; எனக்கு நண்பர்தானே அவர்; மந்திரியாவதற்காக என்னைத் திட்டுவதானால் நான் ஒன்றும் குறைந்து போய்விட மாட்டேன்.

'பெரிய பெரிய கருங்கற்களெல்லாம் நம்மோடு மோதி, தூள் தூளாகிவிட்டன. இது என்ன சாதாரண செங்கல் தானே! நம்மை என்ன செய்து விடப் போகிறது?"

பின்னர் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், 'திராவிடம் புரியவில்லை' என்று சொல்பவர்களுக்குப் பல்வேறு எடுத்துக்காட்டுகளைச் சொல்லி விளக்கினார்கள்.

★

அன்பளிப்பு

30—5—54-ல், அயன்புரம் தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தின்போது, அண்ணா அவர்களால் தோழர் பெருமாள் அவர்களின் மகனுக்கு "மரகதமணி" எனப் பெயர் சூட்டியதின் நினைவாக "நம் நாடு" வளர்ச்சிக்கு ரூபாய் 5 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்

பிரிட்டனில் மோட்டார் தொழில்

இங்கிலாந்து இரண்டாவது உலகப் போருக்குப் பின் இது வரையில் 20 லட்சம் கார்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. 1953-ம் ஆண்டில் 5,95,000 கார்களை ஏற்றுமதி செய்ததாம். உலகில் பிரிட்டனைப் போல் இவ்வளவு அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடு வேறு எதுவும் இல்லை.

இதற்குக் காரணம் பிரிட்டிஷ் கார்கள் உலக மார்க்கெட்டின் விலை அதிக தரம் குறையாது கார்களை உற்பத்தி செய்வதே ஆகும்.

இவ்வாண்டு மார்ச் மாதம் வரை ஆண்டின் மோட்டார் கம்பெனி 20,634 கார்களைத் தயாரித்தது. கார் ஏற்றுமதியின் மூலம், கனடா, அமெரிக்க நாடுகளிலிருந்து 2,50,00,000 டாலர்கள் பிரிட்டனுக்குக் கிடைக்கும்.

அதிக உற்பத்தியின் எதிரொலி

விவசாயிகள் துயரம்

உதகமண்டலம், மே 31—அதிக உற்பத்தி காரணமாக உருளைக் கிழங்கு வியாபாரத்தில் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அப்பகுதி விவசாயிகள் தங்கள் நிலங்களில் தேயிலைப் பயிரிட சர்க்காரிடம் அனுமதி கோரியிருக்கின்றனர்.

இக்கோரிக்கை விரைவில் பரிசீலிக்கப்பட அதை பாராளுமன்ற உறுப்பினர் என். எம். லிங்கம் தலைமை வகித்து நடத்துகிறார்.

செய்திச்சுருள்

★

முத்து இலவச இளைஞர் படிப்பகத் திறப்பு விழா

மதுரை தாலுகா மாடக்குளம் கிராமத்தில் 15—5—54 மாலை 6 மணிக்கு தோழர் கே. என். சந்திரனம், மேற்படி படிப்பகத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் எம். அய்யாச்சாமி, என். முத்து ஆகியோர் பேசிய பின், நடிகர் எஸ். எஸ். இராஜேந்திரன் கழகக் கொடியை ஏற்றி வைத்து, திராவிட நாடு பிரிவினையின் அவசியம் குறித்து சொற்பொழிவாற்றினார்.

ஆரணி மறுமலர்ச்சிமன்ற ஆண்டு விழா

8—5—54 காலை 9-30 மணியளவுக்கு ஆண்டு விழாவை ஒட்டி 500 ஏழைகட்கு கஞ்சி வார்க்கப்பட்டது. அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்தில் நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் பேசிய பின்னர் தோழர் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினார்.

நெடுஞ்செழியன் படிப்பகம்

15—5—54-ல், தோழர்கள் என். வி. நடராசன், மு. கருணாநிதியுடன் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது; கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன; மேற்கு வட்டாரத்தில் உள்ள நெடுஞ்செழியன் படிப்பகத்தை தோழர் கருணாநிதி திறந்துவைத்தார். பின்னர், படிப்பகத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: என். செல்லம்; துணைச் செயலாளர்: என். துரைசாமி; பொருளாளர்: என். இராமன்; விளம்பர உறுப்பினர்: கே. நாராயணன்; செயற்குழு உறுப்பினர்களாக நான்கு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிவகெங்கை மஜீத் நினைவுப் படிப்பகம்

20—5—54 இரவு 10 மணிக்கு வாசி இல்லத்தில் தோழர் வே. முத்தையா தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது புதிய கல்வித் திட்ட ஒழிப்பைப் பாராட்டியும், தோழர் வெங்கடசாமியை படிப்பகத்தின் தற்காலிகப் பொறுப்பாளராக நியமித்தும், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

ஆமதாபாத் இளைஞர் மன்றம்

16—5—54ல், தோழர் ஆர். டி. சலம் தலைமையில் நடைபெற்ற இளைஞர் கூட்டத்தில் மாணவர் முன்னேற்றக் கழகம் என்பதை 'இளைஞர் மன்றம்' என்று திருத்தி அமைக்கப்பட்டும், செயலாளராக என். ஜி. பதி, துணைச் செயலாளராக டி. கே. தாசன், பொருளாளராக இரா. வேலாயுதமும், செயற்குழு உறுப்பினர்களாக 10 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கல்லூரி நிலையில் ஆங்கிலமே போதனு மொழியாக இருக்க வேண்டும்

—— (;) ——

'சுதேசமித்திரனும்' ஆதரிக்கிறது !

'கல்லூரிக்குக் கீழ்ப்பட்ட படிப்பை பற்றிய வரை, தாய் பாஷை அல்லது பிரதேச பாஷையிலேயே போதனை நடக்க வேண்டுமென்பதில் எள்ளளவும் சந்தேகத்திற்கு இடமில்லை; ஆனால், கல்லூரிப் படிப்பின் முக்கிய நோக்கம் என்ன என்பதை மனதில் கொண்டு, அங்கு கையாள வேண்டிய போதனை பாஷையை நிர்ணயிப்பது உசிதம்."

'பல துறைகளிலும் உயர்தரமான; நவீன அறிவைப் பெறுவதே அந்நோக்கமாயின், நாம் ஆங்கில பாஷையைப் புறக்கணிப்பது சாத்தியமன்று! சர்வதேச பாஷைகளில் முதல் ஸ்தானத்திலிருப்பது ஆங்கிலமே! அதிலேயே அறிவியல் நூல்கள் பலவும், குறிப்பாக, விஞ்ஞான நுணுக்கங்களெல்லாம் உலகின் பல பாகங்களிலும் பரவி வருவது கண்கூடு! அந்த அறிவை நாமும் பெற்று நமது நாட்டின் துரிதமான முன்னேற்றத்துக்குப் பயன்படுத்துவதெனில், நமது கல்லூரிகளில் ஆங்கிலத்துக்கு ஒரு முக்கிய ஸ்தானம் கொடுத்தே ஆக வேண்டும்."

"இதற்காக நமது தாய் பாஷை அல்லது பிராந்திய பாஷை ஒரு போதும் கல்லூரிகளில் போதனா பாஷையாகாதென்பதில்லை."

'ஆனால், இதில் கண்முன் உள்ள நிலைமையைக் காணாமல் அவசரப்படுவது பாஷைக்காக அறிவைக் காவு கொடுப்பதாகிவிடும் என்று ராஜ்யக் கல்வி மகாநாட்டுத் தலைவர் விடுத்த எச்சரிக்கை நமது கல்விச் சீர்திருத்தக்காரர்களின் மனதில் பதியுமென்று எண்ணுகிறோம்."

—இவ்வாறு, 27-5-54 'சுதேசமித்திரன்' பத்திரிகை தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக அரங்கில்

டோக்கியோ :
டோக்கியோ பல்கலைக் கழகப் பேராசிரியர் மசாகா மன்று பாரா என்பவர் 'சிரோனின்' என்னும் புதிய மருந்தொன்றை புற்று நோயைக் குணப்படுத்த கண்டுபிடித்திருக்கிறார்.

★

கொழும்பு :
இலங்கை ஐனநாயகக் காங்கிரசின் மன்னாள் தலைவர் தே இராஜலிங்கம் இலங்கை சர்க்காரின் போக்கைக் கவனித்தால், இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை இலங்கை சர்க்கார் மதித்ததாகத் தெரியவில்லை என்று கூறினார்.

★

லக்சம்பர்க் :
லக்சம்பர்க் நாட்டின் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில், கத்தோலிக்க சமூக கிறிஸ்துவர்கள் கட்சியினர் வெற்றிடைந்தனர். லக்சம்பர்க் பாராளுமன்றத்தில் 26 கத்தோலிக்கர்கள், 17 சோஷலிஸ்டுகள் 3 கம்யூனிஸ்டுகள் உள்ளனர்.

★

இஸ்மேலியா :
சூயஸ் கால்வாய் பிரதேச நகரமான இஸ்மேலியாவுக்கு அருகில் ஒரு பிரிட்டிஷ் சிப்பாயை எகிப்திய கூட்டத்தினர் கொலை செய்துவிட்டனர்.

★

இரங்கூன் :
இரங்கூனில் நடைபெற்ற ஆசிய சோஷலிஸ்டுகள் மாநாட்டில் காஷ்மீர் பிரச்சினை பற்றி விவாதிக்கப்பட்டபோதிலும் தீர்மானம் எதும் நிறைவேற்றப்படவில்லை என்று மாநாட்டின் கூட்டுச் செயலாளர் மாதேவ் கோகலே கூறினார்.

★

கோலாலம்பூர் :
மலேயாவில் பிரிட்டிஷ் ஹைகமிஷனரான டெம்ப்ளர் தனது 27 மாத நிர்வாகத்திற்குப் பின் நாடு திரும்பும் வழியில் சிங்கப்பூர் சென்றார். மலேயா கலகக்காரர்களை அடக்க அவர் நியமிக்கப்பட்டார்.

★

போர்ட்செயிட் :
சென்ற சனியன்று சூயஸ் கால்வாய் பகுதியில் உள்ள பிரிட்டிஷ் கிடங்கு ஒன்றிற்கு தீயிட்டு நாசமாக்கியது பற்றி எகிப்திய கவர்னரிடம் பிரிட்டிஷ் தூதவர் ஆட்சேபக் குறிப்பொன்றைத் தந்தார்.

★

நியூயார்க் :
அணுசக்திக் கட்டுப்பாடு பற்றி சோவியத் யூனியனின் ஒத்துழைப்பைப் பெறச் செய்த முயற்சிகள் பலன் தரவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவர் கொலம்பியா பல்கலைக் கழக ஆண்டு விழாவில் பேசியபோது கூறினார்.

★

வாஷிங்டன் :
வில்லியம் டக்ளஸ் என்னும் அமெரிக்க உயர் நீதி மன்ற நீதிபதி ஒருவர், 'இன்றே அல்லது நாளையோ வியட்நாமில் சுதந்திர சர்க்காரை ஏற்படுத்துவதே இந்தோ - சீனாவைக் காக்கும் வழி,' என்று கூறினர்.

★

டுனிஸ் :
டுனிஷியாவில் உள்ள பிரெஞ்சுக்காரர்கள் அனைவரையும் ஆயுதங்களுடன் பாதுகாப்பாக இருக்கவும், 'ஹோம் கார்டு' படையினரை ஏற்பாடுகள் செய்யவும், பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளவுமான எல்லா ஏற்பாடுகளுக்கும் பிரெஞ்சு சர்க்கார் அவசர நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டனர்.

ஜினீவா :
மேற்கத்திய நாடுகளின் பிரதிநிதியான பிரிட்டிஷ் வர்த்தகர் ஹெரால்டு வில்சன் என்பவர் தலைமையில், சீனப் பிரதமர் சௌ-என்-லாயுடன் சீன வர்த்தகம் பற்றிப் பேசினார்கள்.

★

பாரிஸ் :
சோவியத் ரஷியா போருக்குத் தயாராக இல்லை என்று பிரான்சின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜூலின்மாக் மாநாடு ஒன்றில் கூறினார்.

★

லண்டன் :
வி. கே. கிருஷ்ணமேனன் புதன் அன்று ஜினிவா செல்வார் என்று அறிவிக்கப்படுகிறது. அவர், கிழக்கு ஆசிய நாடுகள் பற்றி வல்லரசுகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவார்.

★

மாஸ்கோ :
மாலடோவ் ஜினிவாவிலிருந்து மாஸ்கோ திரும்பிவந்து விட்டதாக சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' தெரிவித்தது.

* * *

உக்ரேன் யூனியனின் 30-வது ஆண்டு விழாவிற்கு கிரம்ளினிக் மாலன்கோவ் உள்பட பலர் வருகை திருந்தனர் என்று அச்செய்தி மேலும் கூறுகிறது.

★

ஆஸ்லோ :
நார்வேயின் சரித்திரத்தில் இதுவரை காணாத ஒற்றர்கள் வழக்கு ஒன்று விசாரணையில் இருக்கிறது. சோவியத் தூதவர் அலுவலகத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி உள்பட 12 பேர் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

★

சைகோன் :
வியட்பு நதிப் பிரதேசத்தில பிரெஞ்சுத் துருப்புகள் வியட்மின்களிடமிருந்து ஏராளமான வெடி மருந்துகளையும், ஆயுதங்களையும் கைப்பற்றின என்று ஜெனரல் ரெனி காசினியின் இராணுவ காரியாலயம் தெரிவிக்கிறது.

★

ஸ்பினிட் :
யூகோவின் குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோ பால்கன் ஒப்பந்தம் பற்றிப் பேச கிரீசுக்கு புறப்பட்டுச் சென்றார்.

★

பெல்கிரேட் :
யூகோஸ்லாவாகியாவின் பொருளாதார நிலையைத் துராய்ந்து உதவும் நோக்குடன் அமெரிக்கப் பொருளாதாரத் தூது கோஷ்டி ஒன்று யூகோ முழுவதையும் சுற்றுப்பயணம் செய்கிறது.

★

ஜார்ஜ் டவுன் :
பிரிட்டிஷ் கயானா மக்கள் முன்னேற்றக் கட்சியின் பொதுச் செயலாளர் திருமதி ஜென்னட் ஜெகன் நூவர்க் மாலையின் பிரச்சினைகளில் அமெரிக்க தலையீட்டை வன்மையாகக் கண்டித்தார்.

★

அங்காரா :
துருக்கிப் பிரதமர் அட்னான் மென்டர்ஸ், துருக்கிக்கு அமெரிக்காவின் நீண்டகால உதவித் திட்டம் பற்றிப் பேச விமானம் மூலம் அமெரிக்கா சென்றார்.

★

தைப்பே :
தேசியச் சீன விமானங்கள் டாச்சென் தீவிற்கருகில் கம்யூனிஸ்டு சீனாவின் நீராவிப் படகொன்றைத் தாக்கி மூழ்கடித்தன என்று தேசியச் சீன விமான இலாகா அறிக்கை கூறுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

கள்ளக்குறிச்சி

4—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர் க. வேலாயுதம்
பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
இரா. நெடுஞ்செழியன்
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ
அ. பொன்னம்பலனார்

★

கணியூர்

4—6—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
எஸ். அப்பாவு

திருமணங்கள்

4—6—54 காலை 8-மணிக்கு தோழர் பஞ்சு-பாலசுந்தரன் அவர்களுக்கும், தோழியர் சுசிலாவுக்கும் தோழர் அண்ணாதுரை தலைமையில், ஒட்டன்சத்திரம் மணமகள் இல்லத்தில் திருமணம் நடைபெறும். அவ்வமயம் மு. கருணாநிதி, அ. பொன்னம்பலனார், ஈ. வெ. கி. சம்பத் ஆகியோர் பேசுவர்.

● ● ●

4—6—54 காலை $6\frac{1}{2}$ மணிக்கு தோழர் நாச்சியப்பனுக்கும்—தோழியர் கல்லம்மாளுக்கும் தேவபாண்டலம் மணமகன் இல்லத்தில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெறும். அவ்வமயம் தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி. எம். எல். ஏ. ஆகியோர் பேசுவர்.

சென்னை 4-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு

2—6—54 இரவு 8 மணிக்கு 112. சோலையப்பன் தெரு, கல்யாண இல்லத்தில சென்னை 4-வது வட்ட தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கள கூட்டம் நடைபெறும்.

புதுவை அருகே...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவு காணுமலேயே பாரிஸ் கூட்டம் கலையும் என்று கூறப்படுகிறது.

எப்படியும் இன்னும் ஒரு வார காலம் பாரிஸ் பேச்சு நடைபெறக் கூடும்.

இதற்கிடையில், நெட்டப்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள குபேர் சர்க்கார் நிலைமையை பலப்படுத்திக் கொண்டு வருகிறது.

சமயம் வருகிறபோது நெட்டப்பாக்கத்தைத் தளமாகக் கொண்டு, புதுவை புகுந்து பிரெஞ்சு ஆதிக்கத்தை விரட்டும் போரில் ஈடுபடவும், சாத்யம்தான் என்று குபேர் குழுவினர் கருதுகின்றனர்.

குபேர் குழுவினருக்குக் காங்கிரசின் ஆதரவு பூரணமாகத் தரப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சுப்பையா, குபேர்-காங்கிரஸ் குலவுதலைக் கண்டித்திருக்கிறார்.

விடுதலைப் போரை மீண்டும் விறுவிறுப்பாக நடத்த வேண்டிய கட்டம் விரைவிலே ஏற்படுமென்றும் அதுபோது, ஏராளமான தொண்டர்கள் தேவை என்றும், பணமும் வேண்டும் என்றும் தோழர் சுப்பையா சிதம்பரத்தில் பேசியிருக்கிறார்.

இந்தோ-சீனாவில் தோல்வி ஏற்பட்டுள்ள இந்தச் சமயத்தில், புதுவை சம்பந்தமாகப் பணிந்து போவது, தங்கள்

செய்திக் கதிர்

பல்கலைக் கழகம்
ஆந்திராவில் உள்ள வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்திற்கு பிரதம நீதிபதி வேந்தராக இருக்கவேண்டுமென்று ஆந்திர சட்டசபை தீர்மானித்தது. நாட்டின் கவர்னர்கள் தான் வழக்கமாக பல்கலைக் கழக வேந்தர்களாக இருப்பது இதன் மூலம் மாற்றப்படுகிறது.

★

வெளியேற்றம்
இராணுவ அதிகாரிகளுக்கும், தளவாடங்களுக்கும் இடம் தேவை என்று கூறி காற்பது குடும்பங்களை வீடுகளைக் காலி செய்து வெளியேறுமாறு வடகோடி காமாவில் போர்ச்சுகீசிய அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

★

சாலை அபிவிருத்தி
நல்ல சாலைகள் இல்லாத இடங்களில் அவைகளை அபிவிருத்திக்காக 20 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டதாகவும், இதுவரை 10 கோடி வெளியிடப்பட்டுவிட்டதாகவும், இந்திய ரயில்வே உதவி அமைச்சர் அழகேசன் கூறினார். இதில் சென்னைக்கு ரூ 1 கோடி 8 லட்சம் கிடைக்கும்.

★

பூமிதானம்
பூதானத்தின் கீழ் கிடைத்துள்ள நிலங்களைப் பிரித்துக் கொடுக்க ஒரு உத்தியோக பூர்வமான ஸ்தாபனத்தை ஏற்படுத்த சென்னை சர்க்கார் ஆலோசிக்கிறது. பூதான நிலத்தை சரிவர பெற்றுக்கொண்டு ஒழுங்காகப் பிரித்துக் கொடுப்பதற்காகவே இக்கமிட்டி நியமிக்கப்படுகிறதாம்.

★

குடிதண்ணீர்
உதகையில் சுகாதார அமைச்சர் தலைமையில கூடிய சென்னை பொது சுகாதார போர்டு தண்ணீர் சப்ளை திட்டங்கள் லாபகரமாக இருக்க வேண்டுமென்றும் உபயோகிக்கும் அளவுக்கு ஏற்றபடி குடிதண்ணீருக்கு வரி விதிக்கலாம் என்று சர்க்காருக்கு சிபார்சு செய்திருக்கிறது.

நிலவரி
நாட்டில் கிடைக்கும் நிலவரியில் $12\frac{1}{2}$ சத விகிதம் பஞ்சாயத்துகளுக்கு தருமாறு தீர்மானம் ஒன்றை காவேரிப்பாக்கத்தில் நடைபெற்ற வடார்க்காடு மாவட்ட பஞ்சாயத்து தலைவர்கள் மாநாட்டில் நிறைவேற்றினார்கள்.

★

ரெவின்யூபோர்டு
ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் ஜில்லாக்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து அவற்றின் நிர்வாகத்திற்கு ரெவின்யூ போர்டு மெம்பர்களைப் பொறுப்பேற்கச் செய்யும் திட்டமொன்று சென்னையில் பரிசீலிக்கப்படும்.

★

பஸ் கட்டணம்
பஸ்களில் 3 வயது முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அரைக் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்ற யோசனை சென்னை சர்க்காரின் பரிசீலனையில் உள்ளது.

★

மொழிவழிப் பிரிவினை
ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் அகில இந்திய இந்துமகா சபை மொழிவாரி ராஜ்யப் பிரிவினைக்கு ஆதரவு அளிப்பதாக அறிக்கை ஒன்று கொடுத்தது.

★

தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ்
1954 ஜூலை 1-ந் தேதி முதல் கோவையில் தொழிலாளர் சுகாதார இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை அமுல் செய்வதற்காக ஏற்பாடுகளை சர்க்கார் துரிதமாகச் செய்கின்றனர். இத்திட்டத்தின் விதிகள் மக்கள் கருத்தறிய பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

★

மாஜி இராணுவத்தினர்
முன்னாள் இராணுவத்தினர் கட்சி அரசியலில் ஈடுபடலாகாது; அவர்களது எல்லா ஜில்லா சங்கங்களும் கலெக்டர்களின் கீழ் வேலை செய்ய வேண்டுமென்று சென்னை முதல் அமைச்சர் குலுசில் நடைபெற்ற மாநாடு ஒன்றில கூறினார்.

புது கவர்னர் சாகசம்!

கிழக்கு வங்க புது கவர்னர் மேஜர்-ஜெனரல் இஸ்கந்தர் மீர்சா, மேற்கு வங்கம், அசாம் ஆகிய ராஜ்யங்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில், தனது சர்க்கார், ராஜ்யங்களின் கஷ்டங்களைப் போக்கிக்கொள்ள ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும், அதுபோன்றே தம்முடன் ஒத்துழைக்கும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மைனாரிட்டிகள், கௌரவமாக வாழ வாய்ப்பளிக்கப்படுமென்றும், அவர்களுடைய சொத்து சுயமரியாதையைப் பாதுகாப்பதாகவும், உறுதி கூறி கிழக்கு வங்க மக்களுக்குச் செய்தி தந்திருக்கிறார்.

மேற்கு வங்கம், அசாம், ஆகிய ராஜ்யங்களில், புது கவர்னர், எத்தகைய ஒத்துழைப்பு கோருகிறார்—எதிலே ஒத்துழைக்கச் சொல்கிறார் என்பது செய்தியில் தெளிவாக்கப்படவில்லை.

ஆனால், விஷயமறிந்த அரசியல் வட்டாரத்தினர், கம்யூனிஸ்டுகளை ஒழிக்குவதிலே ஒத்துழைப்பு கோருகிறார் என்று பொருள் கூறுகிறார்கள். வியாபாரத் தொடர்பு சம்பந்தமாக வும் ஒத்துழைப்பு கோரக்கூடும் என்று கூறப்படுகிறது.

பஸ்லுல் ஹக், வீட்டைச் சுற்றி பாகிஸ்தான படையினர் காவலிருக்கின்றனர்.

300-க்கு மேற்பட்டவர்கள் இதுவரை கைதாயினர்.

இதிலே நாலு பேர் மாஜி மந்திரிகள்.

தேசிய சுயமரியாதைக்கே இழிவு தேடுவதாகும் என்று பிரெஞ்சு வல்லரசு கருதுவதாகத் தெரிகிறது.

நியாயத்தைக் கவனிப்பதை விட, போலி கவுரவத்தையே பிரெஞ்சு பெரிதாக மதிக்கிறது.

கோயிலில் இடி

தலைச்சேரி வட்டத்திலுள்ள திருவங்காடு ராமசாமி கோயிலின் மீது இடி விழுந்து, கலசத்தை உடைத்ததுடன் மதில் சுவற்றையும் சேதப்படுத்திற்று.

ஆமாம் சாமிகளாகமாட்டோம்....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தவறுகள் இருந்தால் கண்டிக்கத் தயங்ககூடாது. சர்க்கார் போக்கு சரியாக இல்லை என்றால் அதைத் தடுத்துத் திருத்துவது பிரதேச காங்கிரசின் கடமையாகும் சர்வாதிகாரம் கூடாது—என்று வீராவேசமாக முழக்கமிட்டார்.

முன்னேற்றக் கழகத் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்கள், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (9சீ, குறிச்சி நாராயண செட்டித் தெரு, ஜாம்பஜார்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை, எம். ஏ.